Registered as a News Paper பக்கங்கள் 04 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM peoples daily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 புரட்டாதி 05 ( 21 - 09 - 1991 ) சனிக்கிழமை ஓசை 215

## கி.சேவகர் வெற்றிடம் நிரப்பத் தாமதமாகும்

யாழ் மாவட்டத்தில் வெற்றிடமாகவுள்ள கிராம சேவகர் பதவிகளை நிரப்புவதற்குக் காலதாமதமாகுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது பொது நிர்வாக மாகாண சபைகள் அமைச்சு நாட்டிலுள்ள மேற்படி வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக சில புதிய தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டியிருப்பதால் இந்த நியமனங்களைக் கால தாமதப்படுத்தும்படி யாழ். செயலகத்திற்கு அறிவித்துள்ளது. அதே வேளை எழுது (4ஆம் பக்கம் பார்க்க)

# சபாநாயகர் புறக்கணிப்பால்

# 'பிரேமா' நீதிமன்றம் செல்லலாம்!

(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதி மீது கொண்டுவரப்பட்ட அரசியல் குற்ற விசாரணை கோரும் மனு காலாவதியாகிவிட்டது என்ற சட்டமா அதிபரின் ஆலோசனையை சபாநாயகர் ஏற்காத நிலை உருவாகி வருவதால் சிறிலங்கா ஜனாதிபதி உயர் நீதிமன்றம் செல்வதற்கான நடவடிக்கைகளில் இறங்கியுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

பாராளுமன்ற கூட்டத்தொடர் இடைநிறுத்தம் செய்யப்பட்டதை அடுத்து தனக்கு எதிரான அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை வலுவிழந்துவிட்டதாக கடந்த வாரம் தமக்கு சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனையின் பிரகாரம் தாம் உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாக சபாநாயகர் எம். எச். முகமட்டிற்கு எழுதிய இரண்டாவது கடிதத்திலும் எழுதியுள்ளார் என்றாலும்,

பாராளுமன்றத்தின் சபாநாயகரின் தீர்ப்பே இறுதி (4ஆம் பக்கம் பார்க்க)

### நம்பிக்கையில்லாப் பிரேரணை

## சபாநாயகர் மீது கொண்டுவரக் கோரிக்கை

சபாநாயகர் எம். எச். மொகமெட்டுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றுகொண்டுவரப்படவேண்டும் என்று அரசாங்க பாராளுமன்ற குழு எம் பிக்கள் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற அரசாங்கப் பாராளுமன்ற குழுக் கூட்டத்தில் விவசாய உற்பத்தி அமைச்சர் விஜயரத்தின பண்டா இந்தத் தீர்மானத்தை முன்வைத்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சோவியத்தைப் போன்றே இங்கும் 8 சூத்திரதாரிகள்

- அஸ்வர்

(கொழும்பு)

சோவியத் ஜனாதிபதியை எட்டு சதிகாரர்கள் பதவி கவிழ்க்க முயற்சித்து பின்னர் தோல்வி கண்டனர். இதே போலசர்வவல்லமைகொண்ட எமது ஜனாதிபதியை நீக்குவதற்கு எட்டு சூத்திரதாரிகள் முயற்சிக்கின்றனர். இதுவும் பலிக்காது சாத்திர விதிப்படி எட்டு அபசகுனமான எண்ணாகும் என்று முஸ்லீம் விவகார கலாசார இராஜாங்க அமைச்சர் ஏ.எச். எம். அஸ்வர் கூறினார்.

அண்மையில் புதிய கிராமிய வைத்தியசாலைஒன்றை தமது தொகுதியில் திறந்து வைத்த அஸ்வர் இவ்வாறு கூறினார்.

## புலிகளுக்கு எதிராக 10 கோடி ரூபா

(டில்லி)

தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைக்கட்டுப்படுத்த தமிழகக் காவல் துறைக்குப் பத்துக்கோடி ரூபாவை மத்திய அரசு வழங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவின் கோரிக்கையை அடுத்தே இந்தத் தொகை வழங்கப்பட்டதாக மத்திய பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது.

## பிரேமாவிற்கு ஆதரவாக பிக்குகள் ஊர்வலம்

(கொழும்பு)

நாடு இன்று எதிர்நோக்கும் பிரச்சினைவடக்கு, கிழக்குப் பகுதியில் நடைபெறும் யுத்தம் தானே தவிர நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறை பற்றிய ஆராய்ச்சியல்ல என்று மகா சங்கத்தினர் கருத்து வெளியிட்டனர். நேற்று மாலை கொழும்பு விகாரமாதேவி பூங் (4ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி முறை பயங்கரமானது ஆகையால் மாற்ற முயல்கிறோம்

- சிறிமாவோ

(இரத்தினபுரி)

ஜனாதிபதிமுறை மிகவும் பயங்கரமானது. இந்த பயங்கரத்தை உணர்ந்த இரண்டு அமைச்சர்கள் உட்பட நாற்பத்தியாறு எம். பிக்கள் எம்முடன் இணைந்து பயங்கரமான ஜனாதிபதி முறையை மாற்றமுன்வந்துள்ளனர் என்கிறார் சிறிமாவோ பண்டாரநாயக்கா.

கடந்த ஞாயிறு அன்று இரத்தினபுரி பொது மைதானத்தில் நடைபெற்ற எதிரணிக் கட்சி கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார். மேலும் அவர் எதிர்காலத்தில் எவர் இந்தப்பதவிக்கு வந்தாலும் அந்த அதிகாரத்தை பயன்படுத்தியே தீருவார். இதனால் தான் இந்த முறையை மாற்ற வேண்டும் என நாம் ஆரம்ப முதல் கோரிவருகிறோம் என்றார்.

### ஐ. தே. கட்சி உடைந்து விட்டது

இன்று ஐ. தே. கட்சி ஒன்றாக ஒட்டமுடியாதளவுக்கு உடைந்து போய்விட்டது. ஆனால் ஜனாதிபதி பிளவை உருவாக்கும் வகையில் செயற்பட்டே வந்தார் என்றும் கூறினார்.

### தவறான ஆலோசனை

ஜனாதிபதிக்கு சட்டமா அதிபர் தவறான ஆலோச (4ஆம் பக்கம் பார்க்க)

## குடியுரிமைப் பிரச்சினையில் அவசரப்பட வேண்டாம்

### நரசிம்மராவ் கூறியதாக தொண்டா தகவல்

(கொழும்பு)

இந்தியக் கடவுச்சீட்டு பெற்று இன்னமும் இலங்கையில் வாழும் ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் இந்திய வம்சாவழியினரின் பிரஜாவுரிமைப் பிரச்சினை தொடர்பான விடயத்தில் அவசரப்பட வேண்டாமென இந்தியப் (4ஆம் பக்கம் பார்க்க)

## எட்டு வருடப் போரில் புலிகளின் உக்கிர சண்டை

### இராணுவ தளபதி வியப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கடந்த எட்டு வருட வரலாற்றில் உக்கிரமான சண்டையை மணலாற்றுப் பகுதியில் அவதானிக்க முடிந்தது என்று சிறீலங்கா இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா நேற்று செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்

இச் சண்டையில் பாதுகாப்பு படையினரில் இருநூற்றி இருபத்தைந்துக்கும் அதிகமானோர் காயமடைந்தனர் எனவும், தெரிந்தெடுக் (4ஆம் பக்கம் பார்க்க)

# மணலாறு மோதலில் 9 புலிகள் வீரமரணம்

(நமது நிருபர்)

மணலாறு மாவட்டத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் மோதலில் நேற்று முன்தினம் ஒன்பது புலிகள் வீரமரணமடைந்தனர்.

★ பிருந்தன் (சுந்தரலிங்கம் இந்திரலிங்கம், அல்வாய் வடக்கு)

★ மல்லிகா (செல்வலட்சுமி இராசலிங்கம், 5 ஆம் வாய்க்கால், கிளிநொச்சி)

★ கார்த்திகா (வசந்தா நடராசா, 7ஆம் வட்டாரம், வேலணை)

★ சுமன் (இராசையா சந்திரகுமார், ஓமந்தை, (4ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கம்பரையில் மீட்பு நிதி செலுத்த ஏற்பாடு

காரைநகரிலிருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வதிவோரிடமிருந்து 28-09-91 சனிக்கிழமை காலை 8 00 மணிக்கும் 10.30 மணிக்குமிடையில் வடக்கம்பரையில் மீட்பு நிதி திரட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. காரைநகரைச் சேர்ந்த மீட்பு நிதி செலுத்த விரும்புவோர் இவ் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

## தியாகி திலீபன் நினைவாக உண்ணா நோன்பு

தியாகி திலீபன், தியாக மரணத்தை தழுவிக்கொண்ட இடமான நல்லூர் வீதியிலே திர்வரும் 24ஆம். 25ஆம், 26ஆம் திகதிகளில் மாபெரும் உண்ணா நோன்பும் நினைவுக் கூட்டங்களும், கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. காலை 8-00 மணி தொடக்கம் பி. ப. 4-00 மணி வரை உண்ணா நோன்பும் மாலை (4ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சை முடிவுகள் அடுத்த வாரம் வரலாம்

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற க. பொ. த. உயர்தர 1990ஆம் ஆண்டிற்கான பரீட்சை முடிவுகள் கடந்த 12ஆம் திகதி வெளியாகிய போதிலும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கு வரும் திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க்கிழ (4ஆம் பக்கம் பார்க்க)

"ஒரு மாபெரும் சதிவலைக்குள் சிக்கி வரும் எம் மக்களை எப்படியாவது விடுவிக்க வேண்டும்.

— திலீபன்

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

### 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் பிரிவு 46 (1) இன் கீழான விசாரணை

யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் திரு. செல்லையா லிங்கநாதன் அவர்களால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் செல்லத்துரை கனகசபாபதி (கூட்டுறவு பரிசோதகர்) ஆகிய நான் வடமாகாண கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் அமைப்பு, தொழிற்பாடு, நிதிநிலைமை தொடர்பில் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் பிரிவு 46 (1) இன் கீழான விசாரணை ஒன்றை 1991-09-24 ஆம் திகதி காலை 10-00 மணிக்கு மேற்படி சமாச அலுவலகத்தில் ஆரம்பிக்கவுள்ளேன்.

இச்சங்கத்தின் எவையேனும் கொடுக்கல் வாங்கல்கள் பற்றி அல்லது இச்சங்கத்தின் அலுவல்களின் முகாமை பற்றி ஏதேனும் தகவல் தரவிரும்பும் எவரும் 1991-09-30 ஆம் திகதிக்கு முன்னர் இச்சங்க அலுவலகத்தில் (201 மூன்றாம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்) நேரில் வந்து எழுத்துமூலமோ அல்லது வாய்மூலமோ எனக்கு அறியத் தரும்படி தயவாக கேட்டுக்கொள்கிறேன்.

செ. கனகசபாபதி
விசாரணை உத்தியோகத்தர்

(B/ 3155)

## 65 ஆம் நாள் நினைவஞ்சலி

வீர ஜனனம் 31 — 07 — 1975



வீர மரணம் 17 — 07 — 1991

### வீரவேங்கை அறிவொளி
(கணேஷ் சுபாகரன் (சுபா)
இரத்தினபுரம் கிளிநொச்சி

அன்பின் அறிவொளியே
அறிவின் சுடர் ஒளியே
அன்னியன் தளம் அதனை
அழித்தொழிக்க வேங்கையாய்
அஞ்சாமல் போர் புரிந்தாய் - பல்
ஆண்டாண்டு காலங்கள்
அகன்றோடி மறைந்தாலும் - உன்
ஆண்மை அதன் வீரத்தை நாம் மறவோம்

(இவருடன் வீரமரணமடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது வீரவணக்கங்களை செலுத்துகின்றோம்)

(R/ 1768) -- நண்பர்கள்

## தியாகி திலீபனின் 4-ம் ஆண்டு நினைவாக...



"விடுதலை புலிகள் வாழவேண்டுமென்றோ ஆளவேண்டுமென்றோ ஆசை கொள்ளவில்லை. எமது மக்களின் நிரந்தரமான, சுபீட்சமான எதிர்காலம் கிடைக்குமானால் நாம் அனைவரும் மரணிக்கவும் தயாராக உள்ளோம்"

— திலீபன்

24-09-1991 பிற்பகல் 2.30 மணிக்கு அஞ்சலிக் கூட்டம் சங்கத் தலைமைப்பணிமனையில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

வலி கிழக்கு
வட பகுதி ப. நோ. கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

பணியாளர்களும்
பணிப்பாளர்களும்

(B/3154)

## வரி விளம்பரம்

### மணமகன் தேவை

யாழ். குற்ற மற்ற 33 வயது அரசாங்க உத்தியோகப் பெண்ணுக்கு கனடா செல்ல விரும்பும் A/L, Bsc, Technical, Accountant, மணமகன் தேவை. உடனடியாக Sponsor பண்ணி அனுப்பலாம். மங்கள ஏஜென்சி கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம். (R/1769)

## யெல்சின் திடீர் சுகவீனம்

(மொஸ்கோ)

தமது அலுவலகத்தில் பணியில் ஈடுபட்டிருந்த ரஷ்யக் குடியரசின் அதிபர் பொரிஸ் யெல்சின் திடீர் சுகவீனமுற்று வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இத்தகவலை வெளியிட்ட அவரது உதவியாளர் ஒருவர் யெல்சின் நிகழ்ச்சிகள் நேற்று முன்தினம் முதல் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாயினும் அவர் கடுமையான சுகவீனம் அடைந்திருப்பதாக கூறப்படுவதை மறுத்துள்ளார். இதய நோயும் கடுமையான ஈரப்பதனும் தான் யெல்சினின் சுகவீனத்திற்கு காரணம் என்றும் அவர் கூறினார்.

## நில நடுக்கத்திற்கு 25 பேர் பலி

(லண்டன்)

தென் அமெரிக்க நாடான குவாற்றிமாலாவில் இடம்பெற்ற நில நடுக்கத்தில் 25 பேர் உயிர் இழந்துள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற பத்து நிமிட பலமான நிலநடுக்கத்தின் போதே இந்த உயிர் இழப்புக்கள் ஏற்பட்டன. வேறும் பலர் காயமடைந்ததாக பி.பி.ஸி. அறிவித்தது.

## 11 முஸ்லிம்கள் கிழக்கில் கொலை

(கொழும்பு)

பொலநறுவை மாவட்டத்தில் மெரிதிகிரிய முஸ்லிம் கிராமத்தில் புகுந்த இனந்தெரியாத ஆயுத பாணிகள் பதினொரு பேரைக் கொன்றதாக சிறிலங்கா உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார். மேலும் ஆறுபேர் இத்தாக்குதலில் காயமடைந்தனர்.

## தாயைக் கொன்றவனுக்கு மரண தண்டனை

(யாழ்ப்பாணம்)

1985ஆம் ஆண்டு வைகாசி மாதம் தனது தாயாரை திட்டமிட்டு கொலை செய்தமை, மேலும் கொழும்பில் லீலாவதி என்ற பெண்ணின் கொலைக்கு உடந்தையாக இருந்தமை போன்ற குற்றங்களுக்காக முருகுப்பிள்ளை மதியழகன் (வயது 25; 8 ஆம் வட்டாரம் புங்குடுதீவு) என்ற இளைஞருக்கு கடந்த புதன் கிழமை மாலை 4.30 மணியளவில் புங்குடுதீவில் தமிழீழ விடுதலைப்புலிகளால் மரணதண்டனைவழங்கப்பட்டது.

<u>தியாகத்துளி - 7</u>

### காத்திருந்தாய்

காக்க வந்தவர்கள்
கயவராய் மாறுவரோ?
இல்லை ...
பார்த்திருப்போம்
பலன் கிட்டும் – என்று
காத்திருந்தாய் ...
கண்டதென்ன?

— வாஞ்சிநாதன்

## மரண அறிவித்தல்
## ஜஸ்ரின்
## (பொன்னுச்சாமி பாஸ்கரன்)

காங்கேசன் துறையைச் சேர்ந்த செல்வன் பொன்னுச்சாமி பாஸ்கரன் [ஜஸ்ரின்] (முன்னாள் சிமெந்து கூட்டுத்தாபன ஊழியரும்) மணலாறு நேரடி மோதலில் 1991 09 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வீரமரணம் எய்தியுள்ளார்.

இவர் கந்தையா பொன்னுச்சாமி, பொன்னுச்சாமி சொர்ணம் ஆகியோரின் அன்பு மகனும் சிவபாஸ்கரன் [முன்னாள் ஊழியர் நகரசபை வவுனியா, நாடக, இசைக் கலைஞர்], பாலபாஸ்கரன் [ஊழியர் சிமெந்துக் கூட்டுத்தாபனம்], பேபிசரோசா, தவபாஸ்கரன், குணபாஸ்கரன், ஜெயபாஸ்கரன் [சவூதி அரேபியா] ஆகியோரின் அன்புச்சகோதரரும் சி. சரஸ்வதி பா. பாலயோகினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சி. சயந்தன், பா. பாலகரன், பா. லால்கரன், ஆகியோரின் சிறிய தந்தையாருமாவார்.

இணுவில் தெற்கு
இணுவில்

தகவல்
க. பொன்னுச்சாமி
தந்தையார்

(B/3158)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தமிழ்த் தாயின் மடியில் 30 — 12 — 1972



தமிழீழ அன்னை மடியில் 22 — 08 — 1991

### வீரவேங்கை அமலன்

(புலிகளின் குரல் தொழில் நுட்பப்பிரிவுபொறுப்பாளர்)

தென் தமிழ் ஈழத்தில் திருக்கோணமலையிலே பிறந்து தவழ்ந்து பொங்கி எழுந்து புலிவீரனாகி எதிரிகளோடு சமராடி வீரம் விளையும் தமிழீழ மண்ணில் வானொலி பரப்பும் வித்தகன் ஆனாய்... தமிழீழமண்ணைப் பிரித்து அழிக்கும் ஆனையிறவு எதிரிகள் மீது தொடுத்த போரிலே படைப்பிடிப்பு அணியுடன் இணைந்து சென்ற நீ... வீழ்ந்தாய் மண்ணில் விதையாகவே! தமிழ்ஈழம் என்னும் உனது கனவு நனவாகும் நாளை! நண்பனே! அதுவரை நாங்கள் போராடுவோம்.

(B/3165) -நண்பர்கள்

## நினைவு கூருகின்றோம்...

### 1991 - 09 - 21

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் யாழ்ப்பாணத்தில் தவறுதலாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த

லெஸ்ரர் (செபஸ்ரியாம்பிள்ளை ஜெபநேசன் - நெடுங்கண்டல்)

1990 ஆம் ஆண்டு வசாவிளான் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் காயமுற்று பின்னர் வீரமரணமடைந்த

மொசாட் | காந்தன் (மகேந்திரராசா ஜெயகாந்தன் - 2 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு)

மட்டக்களப்பு புதுக்குடியிருப்புப் பகுதியில் முஸ்லிம் ஊர்காவல் படையினரால் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட 19 தமிழர்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B/ 3152)

## சிந்தனைக்கு

பஞ்சணையில் அடிமையாய் இருப்பதைவிட
முள்ளணையில் சுதந்திரமாய் இருப்பதே மேல்.
— மகாத்மா காந்தி


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாண 21-09-1991
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் [illegible]
த. பெ. எண் 95


# சிறிலங்கா நெருக்கடியில் இன்றும் தமிழர்களே

சிறிலங்காவில் அரசியல் நெருக்கடி வலுத்து வருகின்றது. சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அதிருப்தியாளர்களின் கை சற்று ஓங்கிவருவதாகவே தெரிகின்றது நேற்று முன்தினம் இரு அமைச்சர்கள் தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளார்கள். இந்த அமைச்சர்கள் பதவி விலகியதன் மூலம் சிறிலங்கா ஜனாதிபதிக்கு ஆதரவாக 116 எம். பிக்கள் கையொப்பம் இட்டு அனுப்பிய தீர்மானமே கேள்விக்குரியதாகியுள்ளது.

பதவி விலகிய இரு அமைச்சர்களும் விடுதலைப் புலிகளுக்கு ஜனாதிபதி பிரேமதாசா ஆயுதம் இரகசியமாக வழங்கினார் என்பதை ஆட்சேபித்தே தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர். அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட அதிருப்தியாளர்களும் தற்பொழுது இவ் விவகாரத்தையே திரு. பிரேமதாசாவிற்கு எதிரான பிரதான குற்றச்சாட்டாக முன்வைத்துத் தமது பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா மீது எதிர்க்கட்சியினரும், அதிருப்தியாளர்களும் இணைந்துகொண்டு வந்த குற்ற விசாரணை கோரும் மனுவில் திரு. பிரேமதாசா மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அனேகம். செயலாளர் நியமனங்களில் இருந்து கொலைகள், மோசடிகள், ஏமாற்றுக்கள் உடல் - உளப் பலவீனங்கள் என்ற வரிசையில் பல்வேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றாக இந்திய இராணுவம் வடக்கு - கிழக்கில் இருந்தபோது விடுதலைப் புலிகளுக்கு இரகசியமாக ஆயுதம் வழங்கியமையும் ஒன்றாகும்.

விபரமாகக் குறிப்பிடும் போது பத்திரிகையாளர் றிச்சார்ட் டி சொய்சா படுகொலையில் இருந்து ஜே.வி.பி என்ற பெயரில் படுகொலை செய்யப்பட்ட 40,000 மேற்பட்ட இளைஞர்களின் கொலைகளும். பொதுச் சொத்துக்களை தமது உறவினர்களுக்கு வழங்கியமையுட்பட பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கின்ற போதும் அதிருப்தியாளர் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய விவகாரத்தையே சமது முதன்மைப் பிரச்சினையாக வெளிக்கொண்டுவந்துள்ளனர்.

கடந்த காலத்தில் தமிழருக்கு எதிராக எவ்வாறு சிங்கள மக்களின் உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு அரசியல்வாதிகள் அரசியல் லாபம் தேடினார்களோ அதனை ஒத்த ஒரு நடவடிக்கையே இதுவாகும். பல்லாயிரக் கணக்கான சிங்கள இளைஞர்கள் கொல்லப்பட்டது, ஏற்படுத்த முடியாத தாக்கத்தினை - புலிகளுக்கும், தமிழருக்கும் பிரேமதாசா ஆயுதம் வழங்கினார் என்ற பிரச்சாரம் ஏற்படுத்தும் என்று கருதுகின்றார்கள். இதற்குக் கடந்த காலத்தின் நிகழ்வுகள் கொடுத்த படிப்பினையும் காரணமாகலாம். இப்படிப்பினைக்கு கடந்த வருடத்தில் அன்னையர் முன்னணியும், எதிர்க்கட்சிகளும் சேர்ந்து செய்த போராட்டங்கள் தோல்வியில் முடிவுற்றமையே போதுமானதாகும்.

ஆனால், சிறிலங்காவில் எப்பொழுதும் சிங்களமக்கள் மத்தியில் இருந்துவரும் தமிழர் எதிர்ப்புவாதமும், அதையொட்டினால் போல் இருந்து வரும் இந்திய எதிர்ப்பு வாதமும் எப்பொழுதும் உணர்ச்சி ரீதியான பிரச்சினையாகவே இருந்து வந்தது / வருகின்றது, இதனை அரசியல் வாதிகள் தமது அரசியல் தேவைக்கு ஏற்ப எப்பொழுதும் பயன்படுத்தியே வந்துள்ளனர். இன்றைய ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவும் இதனைப்பயன்படுத்தியே வந்தார். அவர் பதவிக்கு வந்தபோது இந்திய இராணுவம் இலங்கையில் இருந்தமையால் அதனை உணர்ச்சியூட்டும் பிரச்சினையாக்கினார். தற்பொழுது அப் பிரச்சினை இன்மையால் புலிகளுக்கும். தமிழருக்கும் எதிரான நடவடிக்கையை உணர்ச்சிகரமான பிரச்சினையாக்க மற்றவர்கள் முனைகின்றார்கள்.

இதற்கு கடந்த 15 மாதமாக நிலவும் யுக்த சூழ்நிலையும் இராணுவத்தினருக்கு ஏற்பட்டுவரும் இழப்பும் சாதகமாகவேயுள்ளது.

உணர்ச்சி பூர்வமான பிரச்சினைகள் கிளறப்படும் போது எவரும் பகுத்தறிவினைப் பயன்படுத்துவது குறைவாகும். அதுவும் தமிழர் விவகாரத்தில நீண்டகாலமாகவே தவறான போதனைக்கும், வழிகாட்டலுக்கும் உட்பட்ட சிங்கள மக்கள் வெற்றுள் அள்ளுண்டு போதல் ஒரு சாதாரண நிகழ்வாகவே இருக்கும்.

இந்த நிலையில் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டியதும் ஒன்றுள்ளது எவ்வளவு பெரிய நெருக்கடிகள், இழப்புக்களின் பின்பும் இனவாதமே அவர்களின் ஆட்சிக்கவிழ்ப்புகளுக்கும், மாற்றங்களுக்குமான பிரச்சினையாக முன்வைக்கப்பட்டுள்ளது. ஆகையினால் எதிர்காலத்திலும் இலங்கையில் இனப்பிரச்சினை தொடர்வதைத் தவிர்க்க முடியாது. சிங்கள கட்சிகள் எவையும் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் எனக் கருதுவதும் மடமை. எனவே போராட்டம் ஒன்றே தமிழருக்குச் சுதந்திரத்தைப் பெற்றுத் தரும்.

# இரத்த ஆறு பாய்கிறது

(நேற்றைய தொடர்ச்சி)

சென்றகிழமை நடந்தேறிய சம்பவங்கள் யூகோசிலாவியாவின் (Yugoslavia) சமஷ்டி அரசியல் சித்தாந்தங்களுக்கு மாத்திரமன்றி ஸ்லோவேனியத் (Slovenia) தீவிரவாதிகளிடமிருந்து அதிக எதிர்ப்பை எதிர்பாராததும், எதிர்ப்பு வந்தபோது பெரிய அளவில் போராட மனமில்லாத தன்மையும் ஸ்லோவேனியா (Slovenia) வுக்கு எதிராக செயற்பட்ட சமஷ்டி இராணுவத்திற்கும் பாரிய இழப்பை ஏற்படுத்தியுள்ளது. சிறு ஆயுதங்களை ஏந்திய ஸ்லோவேனியப் (Slovenia) பயங்கரவாதிகள் சமஷ்டி அரசின் பல படையணிகளைப் பலமாகத் தாக்கியபோது சமஷ்டிப்படையினர் சிலர் திருப்பித் தாக்கினர். மற்றவர்கள் சரணடைந்தனர்.

யூன் மாதம் 26-ந் திகதி மோதல்கள் ஆரம்பமான போது இராணுவமே அரசாங்கத்தின் அனுமதியின்றி தன்னிச்சையாக போரில் ஈடுபட்டது எனக் குறை கூறப்பட்டது மோதல்கள் உச்சக்கட்டத்தில் இருந்த வேளையில் அரசாங்கம் போர் நிறுத்தம் ஒன்றைக் கொண்டுவர முயற்சித்த போது இராணுவத் தளபதி ஜெனரல் பிளகோஜி ஆட்சிக் (Gen. Blagoje Adzil) யூலை மாதம் 2ஆம் திகதி தொலைக்காட்சியில் தோன்றி ஒரு காரசாரமான அறிக்கையை வெளியிட்டார் ஸ்லோவேனியா (Slovenia) வில் யுத்தம் நடக்கின்றது சமாதானத்தைக் கொண்டு வரமுடியாது. நாங்கள் எல்லாவற்றையும் எங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து இந்த மோதலுக்கு ஒரு முற்றுப் புள்ளி வைப்போமென அவர் முழங்கினார்.

இராணுவத்தினரின் அச்சுறுத்தலால் எழுந்த நிலைமை புதிய ஜனாதிபதியின் நியமனத்தைத் தொடர்ந்து சிறிது தணிந்தது சுழற்சி முறையில் சமஷ்டி குடியரசின் ஜனாதிபதி பதவிக்கு நியமனம் பெற வேண்டிய குறோசிய (Crotia) ஜனாதிபதி திரு ஸ்ரைப் மெசிக் (Stipe mesic) கின் நியமனத்தில் ஏற்பட்ட தடங்களால் கூட்டு நிர்வாக அமைப்பு மே மாதம் 15ஆம் திகதியிலிருந்து கலைக்கப்பட்டிருந்தது. ஐரோப்பிய சமூகம்ஏற்படுத்திய சமாதான நடவடிக்கையின் ஒரு அம்சமாகத் திரு. மெசிக் (Mesic) இந்தக் குழப்பங்களின் மத்தியில் யூன் மாதம் 30ஆம் திகதி பதவிக்கு அமர்த்தப்பட்டார். இருப்பினும் பல நாட்கள் ஜனாதிபதி தனது கடமைகளை ஏற்கவில்லை.

அந்த வாரமுடிவில் இராணுவம் தான் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதாகப் பல அறிக்கைகளை வெளியிட்டு நாட்டு மக்களுக்கு நம்பிக்கையை ஊட்ட முயன்றது. நீண்ட மாதகாலமாகப் பல குழப்பத்தின் மத்தியில் சமஸ்டி அரசை நிருவகித்துவரும் குறேசிய (Crotia) குடியரசைச் சேர்ந்த பிரதம மந்திரி திரு. அன்ரே மார்கொவிக்(Mr Ante Markovic) இராணுவம்தன்னிச்சையாகச் செயல்படுகின்றது எனக்குற்றம் சுமத்தியபோது பிரதம மந்திரி தனது கடமைகளைச் சரிவரச் செய்யத் தவறிவிட்டார் என இராணுவம் அவர் மீது குற்றஞ் சுமத்தியது. பரஸ்பரம் ஒருவர் மேல் மற்றவர் குற்றம் சுமத்தியதால் இராணுவத்துக்கும் பிரதம மந்திரிக்குமிடையில் இருக்க வேண்டியஉறவில்விரிசல்ஏற்பட்டது

35 வருடங்களாக யூகோசிலாவியாவை (Yugoslavia) ஆட்சி செய்த ஜனாதிபதி ஜோசிப் புறொஸ் டிட்டோ (Josip Broz Tito) 1980இல் இறந்த பின்னர் யூகோசியாவின் (Yugoslavia) நிருவாகம் எவ்வளவு தூரம் பலமிழந்துவிட்டதென்பதை இந்த விரிசல் எடுத்துக் காட்டுகின்றது. இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் கெரில்லாத் தலைவராக இருந்த இவர் தனது ஆட்சிக் காலத்தின் பெரும் பகுதியைபால்கன்(Balkan) பிரதேசத்தில் நூற்றாண்டுக் காலமாக நிலவிவந்த இனப்பூசல்களை அடக்குவதிலேயே செலவழித்தார். இதற்காக இவர் பயன்படுத்திய கம்யூனிசக் கட்சி தற்பொழுது தேசிய மட்டத்தில் செயல் இழந்ததுடன், இவர் விட்டுச்சென்ற நிருவாக அமைப்பே மீண்டும் இனப்பூசல்கள் எழுச்சிபெற உதவியது.

ஸ்லேவேனியா (Slovenia) வின் சுதந்திரப் பிரகடனமே இப்போதைய நெருக்கடிகளுக்குக் காரணமாயுள்ளது. யூகோசிலாவியா (Yugoslavia) விலுள்ள மற்றக் குடியரசுகள் போலன்றி ஸ்லோவேனியா (Slovenia) வுக்கு மேற்கு ஐரோப்பாவுடனான கலாசாரத் தொடர்புகளும் குடியரசுகள் யாவற்றிலும் பொருளாதாரத்தில் இது முதன்மை வகிப்பதும் மிகவும் வளமான குடியரசாக இது இருப்பதும் சமஷ்டிப் பொருளாதாரத்திற்கு இதனால் வழங்கப்படும் கூடுதலான பங்கை பெல்கிரேட் (Belgrade) டிலுள்ள கம்யூனிசத் தலைமைப்பீடம் துஷ்பிரயோகம் செய்கின்றதென ஸ்லோவேனிய (Slovenia) மக்கள் கருதுவதுமே இது சுதந்திரப் பிரகடனம் செய்யக் காரணமாக இருந்தது, 1990ல் ஸ்லோவேனிய (Sloveuia) மக்கள் தனியரசு அமைப்பதற்கும் கம்யூனிசக் கட்சியில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருவதற்கும் விடுத்த யோசனைகள் பெல்கிரேட் (Belgrade) டிலுள்ள கடும் போக்காளர்களால் நிராகரிக்கப்பட்டது. கடந்த ஏப்ரல் மாதம் ஸ்லோவேனியா (Slovenia) வில் கம்யூனிஸ்ட் அல்லாத அரசாங்கத்தைத் தேர்ந்தெடுத்து சமஷ்டி அரசின் சட்டங்களுக்குத் தங்கள் சட்டங்கள் கீழ்ப்படியாதுஎன ஸ்லோவேனியா (Slovenia) பிரகடனப்படுத்தியதாலேயே இந்தக் கடைசி விரிசல் தோன்றியது. இதுவே சுதந்திரப் பிரகடனம் செய்வதற்கு முன்னோடியாக அமைந்தது.

பெரிய போர் ஒன்று தோன்றுமானால் 8,000 மாகாண காவல் துறையினரையும் 85,000 படையினரையும் கொண்ட ஸ்லோவேனியாப் (Slovenia) படை 180 000 பேரைக் கொண்ட சமஷ்டிப் படைகளுக்கு ஈடுகொடுக்குமா? ஸ்லோவேனியர் (Sloveuia) களுக்குச் சாதகமாகப் பல சூழ்நிலைகள் உண்டு. இவர்கள் யூகோசிலாவியா (Yugoslavin) வின் மறைந்த ஜனாதிபதி மார்சல் டிட்டோ (Marchall Tito) அவர்கள் கடைப்பிடித்த கெரில்லா யுத்த முறையைப் பின்பற்றி, மலைப் பிரதேசங்களில் தங்கள் எதிரியை விடச் சாமர்த்தியமாகப் போரிட முடியும் 1968-ல்செக்கோசிலேவக்கியா (Czechoslovakia) மீது சோவியத் யூனியன் (Soviet Union) படையெடுக்கலாம் என நினைத்தஜனாதிபதிடிட்டோ (Tito) ஸ்லோவேனியா (Slovenia)வுக்குள் யூன் மாதம் 26ஆம் திகதி புகுந்த சமஷ்டிப்படைகளைத் தாமதிக்கச் செய்த ஸ்லோவேனியப் (Slovenia) படைகளைப் போல் சிறிய ஆயுதங்கள் தாங்கிய பிரதேசப் படைகளை அமைத்தார். அதே போல் தாங்கிப் பொறிகள், பாதைத் தடைகள் கொண்டு கவசவாகன அணிகளைத் தாமதிக்க வைத்துத் திடீரெனத் தாக்குதல் மேற்கொள்ளும் யுத்தமுறைகளை ஸ்லோவேனியர் (Slovenia)கள் கையாண்டனர்.

சமஷ்டி இராணுவத்தில் இனப்பூசல்கள் நிலவும் எல்லாச் சமூகத்தவரும் இருப்பதாலும் இவர்கள் கட்டாயமாக இராணுவத்தில் சேர்க்கப்படுவதாலும் இது கட்டுப்பாடோ, ஒழுங்கோ அற்ற ஒரு இராணுவமாக இருக்கின்றது இது ஸ்லோவேனியப் Slovenia) படைப் பிரிவினருக்கு வரப்பிரசாதமாக அமைகின்றது. ஒரு தேசிய இனத்திற்கு எதிராக வன்செயல்களைத் கட்டவிழ்த்து விடும் போது, அந்த இனம் சமஷ்டிக்கு விசுவாசமாக இருப்பது என்பது துர்பலமாகும் சென்றவாரம் நடந்த மோதல்களின் போதும் அதற்குப் பின்னரும் நூற்றுக் கணக்கணக்கான ஸ்லோவேனியர்களும் (Slovenians) குறோசியர்களும் (Crotians) சமஷ்டிப் படையை விட்டு விலகித் தங்கள் தங்கள் குடியரசுப்பாதுகாப்புப்படைகளில் சேர்ந்தனர். சமஷ்டி இராணுவத்தினரிடையேயுள்ள போர் ஆற்றலை சந்தேகக் கண்கொண்டு பார்க்க வேண்டியுள்ளது. "யூகோசிலேவியா (Yugoslavia) இராணுவம் ஒரு சதத்திற்கும் உதவாது" என அமெரிக்க புலனாய்வுத் துறையைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் கூறுகின்றார். அவர்கள் ஒரு போரிலும் ஈடுபடாதவர்கள், படையினர்களில் அதிகமானவர்கள் கட்டாயமாக இராணுவத்தில் சேர்க்கப்பட்டவர்கள் இதிலுள்ள அதிகாரிகளும் விசுவாசமாகச் செயற்படுபவர்களில்லை இந்தக் கூட்டத்தினரை நம்பியிருக்க முடியாது என 1981-ல் அட்சிக் (Adzic) இன் தலைமையிலான மசிடோனியன் (Macedonian) படைப்பிரிவில் கடமையாற்றிய 29வயதானகோராயுஸ்ட் சுகாடொல்நிக் (Goraxd Sukadolnik) என்பவர் கூறுகின்றார்" 11 மாதகால சேவையில் நாங்கள் மூன்று வாரகாலமே உண்மையான பயிற்சிகளைப் பெற்றோம். பலபடையினர் இராணுவ சேவையை ஒரு பொழுது போக்குகின்ற இடமாகவே கருதுகின்றார்கள் எனவும் இவர் கூறுகின்றார். ஒருஇனத்தைச் சார்ந்தவர் வேறொரு இனத்தைச் சார்ந்தவருடன் போர் செய்து ஒருவனைக் கொல்வதும் அல்லது அதில் தான் கொல்லப்படுவதும் எப்படி இப்படையினருக்குத் துன்பத்தை விளைவிக்கின்றதோ அதே போன்று அவர்களுடைய குடும்பங்களுக்கும் துன்பத்தை விளைவிக்கின்றது ஸ்லோவேனியா (Slovenia) வுக்கு எதிரான போரில் ஈடுபட்டிருக்கு சமஷ்டிப்படையில் பங்குபற்றும் வீரர்களின் பெற்றோர்கள் சென்றவாரம் பொல்கிரேட் (Belgrade) டிலுள்ள சேர்பியன் (Serbian) பாராளுமன்றத்தினுள் புகுந்து போரில ஈடுபட்டிருக்கும் தங்கள் பிள்ளைகளை வீடுகளுக்கு அனுப்பும் படி கோரிக்கை விடுத்தனர் அதன் பின்னர் அதிகமான படையினரின் உறவினர்கள் லுபிள்பானா [Liubl-Jana] வுக்குப பேருந்தில் சென்று தங்கள் பிள்ளைகளையும்கணவன்மார்களையும் தங்களுடன் சேர்த்து விடும்படி கண்ணீர் மல்க இராணுவத்தினரைக் கேட்டனர் தனது 20 வயதான சகோதரனைச் சந்திக்க குறோசியா (Crotia) விலிருந்து ஒரு சகோதரன் தனது மனைவியுடன் வந்துஇருந்தார் நாங்கள் சமாதானமாகவே வாழ விரும்புகின்றோம் இல்லாத ஒரு யூகோசிலாவியாவுக்காக எனது சகோதரன் இறப்பதை நான் விரும்பவில்லை என அவர் கூறினார்.

—நன்றி:- ரைம்ஸ்

## களுத்துறை சிறைக்கு மாற்றம்

(கொழும்பு)

கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் களுத்துறை சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இவ்வாறுமாற்றப்பட்டுள்ளதால் இந்த தமிழ் இளைஞர்களின் பெற்றோர்கள் களுத்துறைக்கு பல இன்னல்களின் மத்தியில் சென்று வரவேண்டி இருப்பதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## தாயகத்தை வென்றெடுக்க வீட்டிற்கொரு வீரன்

### - ஆஞ்சநேயர்

(நமது நிருபர்)

நிச்சயமாக எமது மக்கள் போராடுவார்கள். எமது தாயகத்தை வென்றெடுப்பார்கள். ஆனால் இந்த வெற்றியை விரைவில் பெற்றுக் கொள்வதன் மூலம் இந்த மண்ணில் ஏற்படும் பெரும் அழிவுகளை குறைக்க முடியும் அதற்காக தியாகி திலீபனின் நாமத்தைச் சுமந்து நிற்கும் இந்த நான்காம் ஆண்டில் தேசப்பற்று மிக்க பெற்றோர்கள்வீட்டிற்கொருவீரரைத்தந்துதவ வேண்டும் என்று திரு. ஆஞ்சநேயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர் விடுத்த வேண்டுகோளில் மேலும் எமது தாயக விடுதலைப் போராட்டத்தை எமது மக்கள் வென்றெடுப்பார்கள். எமது கரங்களில் இருந்து விழும் ஆயுதங்களை எமது மக்கள் ஏந்துவார்கள் என்ற நம்பிக்கையோடு தான் போராடுகின்றார்கள். வீரமரணத்தைத் தழுவுகிறார்கள் வீரவடுக்களைச் சுமக்கிறார்என்றுகுறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி

னையை வழங்கி உள்ளார். சட்டமா அதிபர் தவறான ஆலோசனைகளைவழங்கியது இது முதல் தடவை அல்ல. பாராளுமன்ற குண்டு வெடிப்புச் சம்பவத்திலும் தவறான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

### கலைக்க முடியாது

ஜனாதிபதி குற்றப் பிரேரணை சபாநாயகரின் கையில் இருக்கும் வரை ஜனாதிபதியால் பாராளுமன்றத்தை கலைக்க முடியாது. அத்துடன் நீதிமன்றம் சென்றாலும் தீர்ப்பு வழங்கும் வரை கலைக்க முடியாது.

### சபாநாயகருக்கு பாராட்டு

இன்றைய நிலையில் இது போன்ற பிரச்சினையில் பாரபட்சமற்ற முறையில் கடமையாற்றும் சபாநாயகரை இலங்கை வரலாற்றிலே காண முடியவில்லை. சபாநாயகர் பாரபட்சமின்றியும், பயமின்றியும் தமது கடமைகளை நேர்மையாக செய்து வருகிறார்.

### இரகசிய வாக்கெடுப்பு

குற்றவிசாரணைபிரேரணை குறித்து இரகசிய வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் என்று எம்பிக்கள் கேட்டால் சபாநாயகரும் அனுமதி வழங்குவார். எம்பிக்களின் பாதுகாப்புக்காகவே இரகசிய வாக்கெடுப்புநடாத்தப்பட வேண்டுமென கேட்கிறோம்.

மேலும் பல எம். பி களும் இந்தக் கூட்டத்தில் உரையாற்றினர்

கிராமசேவகர்

வினைஞர் சேவைக்குத் தற்காலிகமாக ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சையை உரிய காலத்தில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன மேற் டிபரீட்சையை நடாத்தும் பொறுப்பு யாழ். பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்படவிருக்கின்றது

மேற்படி இருபதவிகளுக்கும் நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் யாழ். செயலகத்தில் குவிந்தவண்ணமுள்ளன. (க)

இந்தியா - பாகிஸ்தான்

## காஷ்மீர் எல்லையில் மோதல் இருதரப்பிலும் உயிரிழப்பு

(டில்லி)

ஜம்மு காஷ்மீரில் இந்தியாவின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள இராணுவ நிலையைத் தாக்கி அதனைக் கைப்பற்ற முயன்ற பாகிஸ்தானிய இராணுவத்தின் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக இந்தியா அறிவித்துள்ளது.

இத் தாக்குதலை நூற்றுக்கும் மேற்பட்ட பாகிஸ்தானிய இராணுவத்தினர் நடத்தினர் என்றும், பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டனர் என்றும் இந்திய இராணுவ உயர்அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிவிலில் வந்த பாகிஸ்தானியர் தொலைபேசித் தொடர்புகளை துண்டிக்க முற்பட்டனர் என்றும், உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இத் தாக்குதலில் பாகிஸ்தான் தரப்பில் பத்துப் பேர் வரை கொல்லப்பட்டதாகவும் இதில் ஆறு பேரின் சடலங்கள் தாக்குதல் நடைபெற்ற இடத்திலும் ஏனைய சடலங்கள் பரவலாகவும் இருந்தன என்றும்,

இந்தியா தரப்பில் கூட்டு இராணுவ அதிகாரி உட்பட ஆறு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும் அதிஅதிகாரிகள் தெரிவித்தனர்.

## பயிலுனர் ஆசிரியருக்கு 100 ரூபா மேலதிக படி

(நல்லூர்)

மாதாந்தம் ரூபா ஆயிரம் சம்பளம் பெறும் பயிலுநர் ஆசிரியர்களுக்கு தை மாதம் '92முதல் ரூபா 100மேலதிகப் படி வழங்கப்படவுள்ளது.

மேற்படி படியை தேசிய வங்கி மூலம் குறிப்பிட்ட ஆசிரியர்களின் வங்கிக் கணக்கில் வைக்கப்படவுள்ளதாக கல்வி உயர் கல்வி அமைச்சின்பிரதம கணக்காளர் அனைத்து மாகாணப் பணிப்பாளர்களுக்கும், கோட்டக் கல்வி அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த நூறு ரூபா படி பட்டதாரி பயிலுனர் ஆசிரியர்களுக்கு வழங்கப் படமாட்டாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இப் பயிலுனர் ஆசிரியர்களுக்குரிய கணக்குகளை ஆரம்பிப்பதற்கான படிவங்களை அதிபர்களுக்கு நேரடியாக சேமிப்பு வங்கி மூலம் அனுப்பிவைப்பதற்காக இந்த ஆசிரியர்கள் உள்ள பாடசாலைகளின் விபரங்களை உடன் தனக்கு அனுப்பிவைக்குமாறும் அனைத்து கோட்டக் கல்லூரி அதிகாரிகளையும் அவர் பணித்துள்ளார்.

மணலாறு

வவுனியா)

- ★ தம்பி (பாலசுப்பிரமணியம் தேவராசா, காரைநகர்)
- ★ தும்பன் (மகாதேவா குமணன், சாவகச்சேரி)
- ★ ஜீவா (சுப்பிரமணியம் கமலநாதன், 6 ஆம் வட்டாரம், வேலணை)
- ★ சீலன் (தாமோதரம் பிள்ளை இளம்பிறைநாதன், சாவகச்சேரி)
- ★ சிவகாமி (யோகராணி லக்ஸ்மன், பூவரசங்குளம், வவுனியா)

ஆகியோர் வீரமரணத்தைத் தழுவிக் கொண்டவர்களாவர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்

குடியுரிமை

பிரதமர் பி. வீ. நரசிம்மராவ் தன்னிடம் கேட்டுக்கொண்டதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்தார்

தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியா சென்றிருந்த தொண்டமான் இலங்கை திரும்பியதும் செய்தியாளர்களுக்கு அளித்துள்ள பேட்டியொன்றில் நரசிம்மராவின் கோரிக்கையினை தெரிவித்தார்.

தாம் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவையும், ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமனையும், வெளியுறவு அமைச்சர் ஆகியோரையும் சந்தித்ததாகவும் தெரிவித்தார்.

ஏற்கனவே இந்தியா திரும்பியோர் இலங்கை – இந்திய வம்சாவழியினர் ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெற்றுள்ள புனர்வாழ்வு நடவடிக்கைகளை மறுபரிசீலனை செய்ததாக இந்தியப் பிரதமர் தன்னிடம் உறுதி தெரிவித்திருப்பதாகவும் தொண்டமான் தெரிவித்தார்.

பிரேமாவிற்கு

காவில் சகல பௌத்த பீடங்களையும் சேர்ந்த பௌத்த மதகுருமார் இணைந்து பிரேமதாசாவிற்கு ஆதரவான ஆர்ப்பாட்ட ஊர்வலம்ஒன்றை நடத்தினர்.

தியாகி

6-00 மணி தொடக்கம் இரவு 10-30 வரை கூட்டங்களும் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. இறுதி நாளான 26ஆம் திகதி தியாகி திலீபன் வீரமரணமடைந்த நேரமான 10-48 மணிக்கு உண்ணாவிரதிகள் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி தியாகி திலீபனின் உருவப் படத்திற்கு மலர் சாத்துவார்கள். அதனைத் தொடர்ந்து உண்ணாவிரதம் நடைபெற்று மாலை 4-00 மணிக்கு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறும். எங்கள் தாயகத்துக்காகவே தன் தேகத்தையே ஒரு போர்க்களமாக்கி தியாக மரணத்தைத் தழுவிக் கொண்ட எங்கள் வீரமகன் திருநாட்களை நினைவு கொள்ள அனைத்துத் தமிழீழ மக்களும் அணிதிரண்டு வருமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோரியுள்ளது.

ச. ச நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், மாதர் சங்கங்கள், கல்வி நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் யாவும் தியாகி திலீபனின் 4ஆம்ஆண்டு நினைவு நாளிலே தாங்களும் பங்கு கொள்வதோடு சகல மக்களையும் அணிதிரட்ட உணர்வோடும், உற்சாகத்தோடும் செயற்படுமாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோரியுள்ளது.

## புலிகள் ஆதரவாளர் மேலும் 10 பேர் கைது

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக சுவரொட்டிகளை ஒட்டியதற்காகவும், ரகசிய கூட்டங்களை நடத்தியதற்காகவும் கோவை நீலகிரி மாவட்டத்தில் மேலும் பத்துப் பேர் தமிழக காவல் துறையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோவையில் பேருந்துகளிலும், சுவர்களிலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக சுவரொட்டிகளை ஒட்டியதற்காக ஏழு பேரும், நீலகிரி மாவட்ட கிராமம் ஒன்றில் ரகசியகூட்டமொன்று நடத்தியதற்காக மூன்று பேரும் கைது செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## ஒக்டோபர் 1 முன் விண்ணப்பிக்கவும்

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குஇம்முறைதோற்றவுள்ள மாணவர்கள் தேசிய அடையாள அட்டை பெற வேண்டுமானால் ஒக்டோபர் மாதம் 1ஆம் திகதிக்குமுன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டுமென ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

காரைநகரிலிருந்து

## எறிகணைத் தாக்குதல் இருவர் காயம்; வீடுகள் சேதம்

காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகளை நோக்கி மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் இருவர் காயமடைந்ததுடன் மூன்று வீடுகளும் சேதமடைந்தன.

நேற்றுமுன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட மேற்படி எறிகணைத் தாக்குதலின் போது பல தடவைகள் பொது மக்களின் குடியிருப்புப்பகுதிகளுக்கிடையில் எறிகணைக் குண்டுகள்வீழ்ந்து வெடித்தன

இப்பகுதியில்இருந்த பொது மக்களின் மூன்று குடியிருப்புக்கள் சேதமடைந்தன. காரைநகரில்இருந்து இடம்பெயர்ந்து வந்து இப்பகுதிகளில் தங்கியிருந்த இருவர் காயமடைந்துள்ளனர்.

இத்தாக்குதலைத் தொடர்ந்து இப்பகுதிகளில் இருந்து பல பொது மக்கள் இடம் பெயர்ந்து சென்றதை அவதானிக்க முடிந்தது. (க)

## சொற்பொழிவு

மூதறிஞர் கா சி. குலரத்தினம் அவர்களால்''அறுபது ஆண்டுகளுக்கு முந்திய யாழ்ப்பாணம்'' என்னும் பொருள் பற்றிய சொற்பொழிவு ஒன்று கோண்டாவில் தலைமைச் செயலக கேட்போர் கூட்டத்தில் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரால்பிரதிஞாயிறுதோறும் நடாத்தப்படும் மேற்படி நிகழ்ச்சியில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழக பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை கேட்டுள்ளார்.

## தடகள விழா ஒத்திவைப்பு

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் நாளையும் நாளை மறுதினமும் நடாத்தப்படவிருந்த தியாகி திலீபன் நினைவு தடகள விழா எதிர் வரும் 28ஆம், 29ஆம் திகதிகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 27-09-91 அன்று காலை ஆறு மணிக்கு நடைபெறுவதாகஇருந்தவேக நடை போட்டியும் 28 ஆம் 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள தடகள விழாவும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

எட்டு

கப்பட்ட விசேட படைப்பிரிவு ஒன்று மற்றைய காலாட் படையினரினதும், விமானப் படையினதும் துணையோடு தாக்குதல் நடத்தி வருவதாகவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'லங்கா புவத்' அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

மேலும் மணலாற்றுப் பகுதியில் தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்கும் இடையே பலத்த மோதல்கள் இடம் பெற்று வருவதாகவும், ஹெலிகொப்டர்களின் துணையோடு இராணுவம் குண்டு வீச்சுக்களை நடத்தி வருவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை மணலாற்றுப் பகுதிக்கு மேலும் இரண்டாயிரம் இராணுவத்தினர் கூடுதலாக அனுப்பப்பட்டிருப்பதாக பி. பி. ஸி. நேற்றிரவு கூறியது.

## மாணவர் படிப்பதற்கு மின்சாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் இரவு வேளைகளில் படிக்க ஜெனரேட்டர் மூலம் மின்சாரம் வழங்கப் பட்டு வருகிறது.

சபாநாயகர்

யானதும், உறுதியானதும் என அரசியல் அமைப்பு சட்ட வல்லுனர்கள் தெரிவித்துள்ளதைத் தொடர்ந்தே பிரேமதாசா பாராளு மன்றத்தில் குற்றவிசாரணை கோரும் மனு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் பட்சத்தில் உயர் நீதிமன்றம் செல்லலாம் எனத் தெரியவருகிறது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சபாநாயகரும் சட்டமா அதிபரும் வித்தியாசமான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதால் உயர்நீதிமன்றமே இறுதி முடிவினைத் தெரிவிக்க நேரிடலாம் எனத் தெரிவித்தார்.

பரீட்சை

மையே வந்து சேரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைத் திணைக்களத்தால் இத்தகவல் அறிவிக்கப்பட்டுள்ளது அத்துடன் இந்த விடைத்தாள்களை மீண்டும் பரிசீலனை செய்ய விரும்பும் பரீட்சார்த்திகள் வரும் ஒக்டோபர் 7ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.